**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் மாவட்டம்**
**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**

**ந.க.எண்.101/மாஒ1/நான்முதல்வன்–CG/ஒபக/2024, நாள்.26.04.2024**

**பொருள் :** ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – நான் முதல்வன் – 2024–2025 ஆம் கல்வியாண்டு – அரசு மேல்நிலைப் பள்ளிகளில் உயர்கல்வி வழிகாட்டி குழு (Career Guidance Cell) கூட்டுதல் / செயற்படுத்துதல் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் – சார்பு.

**பார்வை :** சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.023758/பிடி2/இ1/2024, நாள்.23.04.2024.

*********

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் மாவட்டம், நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 2024–2025 ஆம் கல்வியாண்டில் வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பார்வையில் காணும் சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளில் தெரிவித்துள்ளவாறு உயர்கல்வி வழிகாட்டி குழு (Career Guidance Cell) கூட்டுதல் / செயற்படுத்துதல் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் உரிய நடவடிக்கையின் பொருட்டு அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்களுக்கு அனுப்பப்படுகிறது.

மேற்படி வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி எவ்வித புகார்களுக்கும் இடமளிக்கா வண்ணம் செயல்படுமாறும், 29.04.2024 அன்று உயர்கல்வி வழிகாட்டி குழுவின் முதல் திட்டமிடல் கூட்டம் நடத்தி அதன் விவரத்தை இவ்வலுவலகம் சமர்பிக்குமாறும் அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

26/04/2024

**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,**
**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**
**வேலூர் மாவட்டம்.**

இணைப்பு – பார்வையில் காணும் வழிகாட்டு நெறிமுறைகள்.

**பெறுநர் –**

1. அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் (தொடர் நடவடிக்கையின் பொருட்டு).
2. அனைத்து மேற்பார்வையாளர்கள் (பொ) மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள், வேலூர் மாவட்டம்.

நகல் – 1. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் – அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), வேலூர்.